மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

கடல் மீனவர்களுக்கு நவீன ரேடியோ கருவிகள் வழங்குதல், சேத்துப்பட்டு ஏரி, சென்னையில் மீன்பிடித் துறைமுகங்களைப் புனரமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவைப் பெருக்குவதிலும், கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் மீன்பிடித் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றாலும் இந்தத் தொழிலை மேற்கொண்டு வரும் தமிழக மீனவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. மீனவர்களின் துயரினை உணர்ந்து எனது தலைமையிலான அரசு, மீன்பிடித் தடைக் காலங்களில் வழங்கப்பட்டு வரும் தொகையை இரட்டிப்பாக்கியது. மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் சிறப்பு நிவாரண உதவித் தொகையாக 4,000 ரூபாய் வழங்கும் முன்னோடித் திட்டம், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் வழங்கும் திட்டம், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 5,600 மீன்பிடி விசைப்படகுகள் உள்ளன. சில மீனவர்கள் தங்கள் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்களைப் பொருத்தியுள்ளனர். இன்னும் பெரும்பாலான விசைப்படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்கள் ஏதுமில்லை.

மீனவர்களின் பாதுகாப்பிற்கு உயர் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத விசைப் படகுகளுக்கு மானிய விலையில் V.H.F. ரேடியோ கருவிகள் வழங்கப்படும் என்பதையும்; (மேசையைத் தட்டும் ஒலி) கடலோரப் பகுதிகளில் உயர் கோபுரங்களை அமைத்து மீனவர்கள் எளிதில் தொடர்புகொள்ளத் தேவையான தகவல் தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 20,000 ரூபாய் விலையுள்ள இந்த V.H.F. கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள்மூலம் இடர் நேரிடும் காலங்களில் கரையில் இருக்கும் அரசு அலுவலர்களையும், குடும்பத்தினரையும் தொடர்புகொள்ள இயலும். இதேபோன்று, புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் எச்சரிக்கைத் தகவல்களை அரசு அலுவலர்கள் மீனவர்களுக்குக் கொண்டு செல்ல இயலும். மேலும் ஐதராபாத்தில் உள்ள கடல் தகவல் பணிக்கான இந்திய தேசிய மையத்திலிருந்து, அதாவது Indian National Centre for Ocean Information Service-லிருந்து பெறப்படும் தகவல்களைத் தாமதமின்றி மீனவர்களுக்கு உடனடியாக அனுப்பிடவும் இந்தத் தகவல் தொடர்பு வசதி பயன்படும். இதனால் மீனவர்கள் துல்லியமாக மீன்கள் நிறைந்த பகுதிக்குச் சென்று மீன் பிடிக்க இயலும்.

தொலைதூரத்தில் ஆழ் கடல் பகுதியில் ஒரு மாதத்திற்கும் மேலாக தங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் படகுகளுக்கு அதிக அலைவரிசை கொண்ட H.F. ரேடியோ கருவி வசதிகள் தேவைப்படுவதால், அதிக விலை கொண்ட இந்த H.F. ரேடியோ கருவிகள் தேவைப்படும் மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இந்த H.F. கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான கட்டுப்பாட்டு அறைகளை நிருவகிக்கும் பொறுப்பினையும் மீன்வளத் துறை ஏற்கும். 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகரம் வேகமாக வளர்ந்து வரும் சூழ்நிலையிலும், தொடர்ந்து நீர்ப்பிடிப்புப் பகுதியாகவே விளங்கும் மீன்வளத் துறைக்குச் சொந்தமான 15 ஏக்கர் பரப்பளவுடைய சேத்துப்பட்டு

ஏரி 42 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அங்கு பொழுதுபோக்கு தூண்டில் மீன் பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்கா, அதாவது, Sports Fishing-cum-Eco Park அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

இந்த ஏரியில் பொழுதுபோக்கு அம்சங்களான தூண்டில் மீன் பிடிப்பு, நீர் சாகச விளையாட்டுகள், படகு சவாரி, திறந்த வெளி அரங்கங்கள் மற்றும் சிறுவர்கள் விளையாட்டுத் திடல் போன்ற வசதிகள் அமைக்கப்படும். இந்தப் பூங்கா பசுமையுடன் விளங்கும் வகையில் ஏரியின் கரையோரங்களில் அழகிய மற்றும் அரிய வகை மரங்கள் வளர்க்கப்படும். இந்தப் பசுமைப் பூங்காவில் உருவாக்கப்படவிருக்கும் நடைபாதை மற்றும் தொடர் நடை ஓட்டப் பாதைகள் மக்களுடைய உடல் மற்றும் மன நலத்தை ஆரோக்கியமாகப் பேண உதவும். இங்கு ஏற்படுத்தப்படவிருக்கும் பல அடுக்கு வாகன நிறுத்த வசதிகள் அந்தப் பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வழிவகை செய்வதோடு, சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களும் இப்பூங்காவினைப் பயன்படுத்த வழிவகுக்கும். இங்கு அமைக்கப்பட இருக்கும் மீன் உணவகம் சென்னை வாழ் மக்களின் நாவிற்கு நல் விருந்தாக அமையும். (மேசையைத் தட்டும் ஒலி)

காசிமேடு மீன்பிடித் துறைமுகம் என்றும், இராயபுரம் மீன்பிடித் துறைமுகம் என்றும் அழைக்கப்பெறும் சென்னை மீன்பிடித் துறைமுகம் 1984 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 575 மீன்பிடி படகுகளை நிறுத்திடத் தேவையான வசதிகள் கொண்டதாக இந்த மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி தாக்குதலால் மீன்பிடி இறங்கு தளம் மிகவும் பழுதடைந்தது. பழுதடைந்த இந்த மீன்பிடி இறங்கு தளத்தை சீர் செய்ய 2011 ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசு 16 கோடியே 24 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி) படகு நிறுத்துமிடம் சீரமைக்கப்படுவதுடன், மீன் ஏலக்கூடம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தற்போது இந்த மீன்பிடித் துறைமுகத்தில் படகுகளின் எண்ணிக்கை 1,395 ஆக உயர்ந்துள்ளதையும், கையாளப்படும் மீனின் அளவு அதிகரித்துள்ளதையும், இட

நெருக்கடி காரணமாக மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதில் மிகுந்த இடையூறுகள் ஏற்படுவதையும் கருத்தில் கொண்டு 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் துறைமுகம் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, வடக்கு அலைத் தடுப்புச் சுவரில் 300 மீட்டர் நீளத்தில் புதிய படகு அணையும் துறை அமைத்தல், கண்ணாடி நாரிழை படகுகள் நிறுத்துவதற்கு ஏற்றவகையில் 200 மீட்டர் நீளத்திற்கு புதிய படகுத் துறை அமைத்தல், தற்போதைய படகுத் துறையினை வடக்கு மற்றும் தெற்கு முனைகளில் தலா 50 மீட்டர் நீளத்திற்கு நீட்டிப்பு செய்தல், 150 மீட்டர் நீளத்திற்கு இரண்டு புதிய துணை படகுத் துறைகளும், 200 மீட்டர் நீளத்திற்கு ஒரு புதிய துணை படகுத் துறையும் அமைத்தல், படகினை பழுது பார்க்க வசதியாக சாய்வு தளம் அமைத்தல், இரண்டு புதிய வலை பழுது பார்க்கும் கூடங்கள் கட்டுதல், சூரிய சக்தி மூலமாக இயங்கும் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மீனவர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தவும், மீனவர்களின் வருவாயைப் பெருக்கவும், அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கடல் மீனவர்களுக்கு நவீன ரேடியோ கருவிகள் வழங்குதல், சேத்துப்பட்டு ஏரி, சென்னையில் மீன்பிடித் துறைமுகங்களைப் புனரமைத்தல்— முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசின் பொற்காலத்தில், மகுடத்தில் தினம் ஒரு மாணிக்கமாய் 110 விதியின்கீழ் துறைகளெல்லாம் செழித்து வளர, துறை சார்ந்திருக்கிற மக்களெல்லாம் இன்புற்று மகிழ்வோடு மகிழ்ந்து வாழ பல்வேறு